## இலங்கை ஏற்றுமதிக் கடன் காப்புறுதிக் கூட்டுத்தாபனம் - 2015

---

இலங்கை ஏற்றுமதிக் கடன் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1978 இன் 15 ஆம் இலக்க இலங்கை ஏற்றுமதிக் கடன் காப்புறுதிக் கூட்டுத்தாபன அதிகாரச்சட்டத்தின் 20(2) ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் சபையின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

---

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

---

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் கூட்டுத்தாபனத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி கூட்டுத்தாபனத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும்

பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம்

இலங்கை ஏற்றுமதிக் கடன் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 இலங்கை கணக்கீட்டு நியமங்கள்

இலங்கை கணக்கீட்டு நியமம் 08 இன் பிரகாரம் நடைமுறையல்லாச் சொத்துக்களுக்கான பயன்தரு ஆயுட்காலம் வருடாந்தம் மீளாய்வு செய்யப்படாமையின் காரணமாக முறையே ரூபா 3,217,783 கிரயமான மோட்டார் வாகனம் மற்றும் ரூபா 160,619 கிரயமான அலுவலக உபகரணங்கள் ஆகியன முழுமையாகப் பெறுமானத் தேய்விடப்பட்டிருந்த போதிலும், தொடர்ந்தும் பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டவாறிருந்தது. அதன் பிரகாரம் மதிப்பீடு செய்யப்பட்ட வழுவைத் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

#### 2.2.2 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

மீளாய்வாண்டில் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் ரூபா 2,103,756 கூட்டுத்தொகையான மீளச் செலுத்த வேண்டிய வைப்புக்களுக்காக விரிவான பட்டோலையொன்று கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

2000 சனவரி 31 ஆந் திகதிய பீஎப்/பீஈ/6 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 24 ஆம் பிரிவின் பிரகாரம் உழைக்கும் போதே செலுத்தும் வரி, கூட்டுத்தாபனத்திற்குரிய உத்தியோகத்தர்களின் சம்பளத்திலிருந்து கழித்து உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு அனுப்பிவைக்கப்பட வேண்டியிருந்த போதிலும், அதற்கு முரணாக மீளாய்வாண்டின் போது 38 உத்தியோகத்தர்களுக்குரிய உழைக்கும் போதே செலுத்தும் வரியான ரூபா 543,420 தொகை கூட்டுத்தாபனத்தின் நிதியத்திலிருந்து செலுத்தப்பட்டிருந்தது.

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டின் நிதி விளைவுகள் ரூபா 174,076,132 மிகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 161,692,641 ஆகும். முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 12,383,491 அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டது. கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமாகக் காணப்பட்ட அரசாங்கத்தால் கைப்பற்றப்பட்ட சொத்தொன்றிற்காக பெறப்பட்ட ரூபா 42,026,970 தொகையான வருமானமும் ஏற்றுமதி கடன் காப்புறுதி வருமானம் ரூபா 37,039,904 இனால் அதிகரித்தமையும் நட்டஈட்டுச் செலவினம் ரூபா 37,039,904 இனாலும் விஷேட வரித்தொகை ரூபா 25,000,000 இனாலும் அதிகரித்தமை மேற்கூறப்பட்ட அதிகரிப்புத் தொடர்பில் பிரதான காரணமாக இருந்தது.

மீளாய்வாண்டினதும் கடந்த 04 ஆண்டுகளினதும் நிதி விளைவுகளை பகுப்பாய்வு செய்த போது 2011 ஆம் ஆண்டு முதல் 2013 ஆம் ஆண்டுவரை தொடர்ச்சியாக அதிகரித்திருந்ததுடன் 2013 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 2014 ஆம் ஆண்டில் மிகையில் சிறிய குறைவு ஒன்று அவதானிக்கப்பட்ட போதிலும் 2015 ஆம் ஆண்டின் போது முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது அது 7 சதவீத அதிகரிப்பாக இருந்தது. ஊழியர் ஊதியம், நிலையான சொத்துக்களுக்கான பெறுமானத் தேய்வு மற்றும் அரசாங்கத்திற்குச் செலுத்தப்பட்ட வரி என்பவற்றின் சீராக்கலின் பின்னர் 2011 ஆம் ஆண்டின் போது ரூபா 158,028,780 தொகையான நிறுவனத்தின் பங்களிப்பு தொடர்ச்சியாக அதிகரித்திருந்ததுடன் 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளில் அது முறையே ரூபா 237,420,722 மற்றும் ரூபா 284,898,395 ஆக இருந்தன.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

1978 இன் 15 ஆம் இலக்க இலங்கை ஏற்றுமதி கடன் காப்புறுதிக் கூட்டுத்தாபன அதிகாரச்சட்டத்தின் 5 ஆம் பிரிவின் பிரகாரம் கூட்டுத்தாபனத்தின் நோக்கங்கள் பின்வருமாறு இருந்தன.

(அ) பொருட்கள் மற்றும் சேவைகளை ஏற்றுமதி செய்பவர்களுக்கு கிடைக்க வேண்டிய கொடுப்பனவுகள் கிடைக்காமை அல்லது தாமதமடைதல் தொடர்பாக காப்புறுதி உரித்தொன்றை விநியோகித்தல் மற்றும் கப்பலில் ஏற்றுவதற்கு முன்னர் அல்லது கப்பலில் ஏற்றியதன் பின்னர் தேவையான பணம் வழங்குவதை இலகுபடுத்தும் வகையில் நிதி நிறுவனங்களுக்கு பிணை வழங்குதல்.

(ஆ) இலங்கையரினால் மேற்கொள்ளப்படுகின்ற ஏற்றுமதிகளின் போது இலங்கையினுள் அல்லது அதற்கு வெளியே நிறைவேற்ற வேண்டிய சேவைகளுக்காக ஏற்றுமதியாளர்களுக்கு பிணை வழங்குதல், பணமாக உதவி வழங்குதல் மற்றும் நிதியிடல் நிறுவனங்கள் வழங்குகின்ற கடன் வசதிகளுக்காக மீள் நிதி வசதிகளை வழங்குதல்.

(இ) வெளிநாடுகளில் மேம்படுத்தல் நடவடிக்கையின் போது செலவிடுவதற்கு ஏற்படக்கூடிய நட்டங்கள் தொடர்பான பிணைகளை ஏற்பாடு செய்தல் மற்றும் ஏற்றுமதியை அபிவிருத்தி செய்வதற்காக வெளிநாடுகளில் சந்தை ஆராய்ச்சி நடவடிக்கைகளை

கையேற்றல், பல்வேறு பிரிவுகள் தொடர்பாக மாநாடுகள் மற்றும் பாடநெறிகளை நடாத்துதல் மற்றும் விற்பனை தொடர்பான தகவல்களை சேகரித்து விளம்பரம் செய்தல்.

(ஈ) காப்புறுதி மற்றும் பிணை வழங்கல், தேசிய நலனுக்காக தேவையானது என அரசாங்கத்தினால் கருதப்படுகின்ற பொறுப்புக்களை கையேற்றலும் நிறைவேற்றுதலும், ஏற்றுமதி பன்முகப்படுத்துதல், ஏற்றுமதியை விரிவுபடுத்தல் மற்றும் புதிய சந்தைகளை தேடுவதற்கு ஏற்றுமதியாளர்களுக்கு உதவுதல் மற்றும் நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு தேவையானது என கூட்டுத்தாபனம் கருதக்கூடிய ஏனைய நோக்கங்களை நிறைவேற்றுதல்.

நோக்கங்களை நிறைவேற்றுவது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கூட்டுத்தாபனம் ஆரம்பிக்கப்பட்டு 28 வருடங்கள் கடந்திருந்த போதிலும் நிறுவன இயலளவை அதிகரிப்பதற்கு உதவும் காப்புறுதி உரிமை மற்றும் பிணைகளுக்கான நட்டஈடு செலுத்துவதற்கான வழிகாட்டல்கள் உள்ளடங்கிய கைநூலைத் தயாரிக்கும் பணிகள் மீளாய்வாண்டின் போதும் நிறைவேற்றுவதற்கு தவறியிருந்தது.

(ஆ) கூட்டுத்தாபனத்தின் ஒட்டுமொத்த வருமானத்தை பேணிச் செல்வதற்காகவும் அதிகரிப்பதற்காகவும் தேவையான ‘‘உற்பத்திகளை நவீனமயப்படுத்துதல் மற்றும் அபிவிருத்தி’’ என்ற தலைப்பின் கீழ் செயல்நடவடிக்கைத் திட்டத்தில் காண்பிக்கப்பட்டுள்ள பின்வரும் பணிகள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

* உரித்து உரிமையாளர்களுக்காக இழப்பீடு செலுத்தாமையால் மிகையூதியப் படி உரித்து முன்மொழிவுத்திட்டத்தை மீள ஒழுங்கமைத்தல்.

* சிறிய மற்றும் நடுத்தர அளவிலான முயற்சிகளுக்காக (SMEs) காப்புறுதி மற்றும் பிணை உறுதிகளை ஏற்படுத்தல் மற்றும் அந்த முயற்சிகளை இணைப்பது தொடர்பாக நடவடிக்கை எடுத்தல்.

* ஏற்றுமதிக் கடன் பிணை சான்றிதழ் (ஈசீஜீசீ கடன்) வழங்கும் நடவடிக்கைகளுக்காக பதவியணியினருக்கு பயிற்சியளிப்பதற்கு சர்வதேச சமூகத்தின் தொழில்நுட்ப உதவியைப் பெற்றுக்கொள்ளல்.

(இ) தகவல் தொழில்நுட்ப செயற்பாடுகளுக்காக ரூபா 37,000,000 தொகையான நிதிஏற்பாடு செய்யப்பட்டிருந்த போதிலும் 2015 ஆம் ஆண்டின் போது அந்தப் பணிகள் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 2015 ஆம் ஆண்டின் மொத்த காப்புறுதி தவணைப்பண வருமானமான ரூபா 188,760,482 தொகையில் 33 சதவீதம் ஒரு ஏற்றுமதியாளரிடமிருந்தும் எஞ்சியதில் 72 சதவீதம் மேலும் 23 ஏற்றுமதியாளர்களிடமிருந்தும் கிடைத்திருந்தது. இதன் பிரகாரம் கூட்டுத்தாபனத்தின் நிலைத்திருத்தல் சில ஏற்றுமதியாளர்களின் தங்கியிருத்தல் அவதானிக்கப்பட்டமையினால்

கூட்டுத்தாபனத்தின் நிலைத்திருத்தல் மற்றும் வினைத்திறனை முன்னேற்றும் வகையில் புதிய ஏற்றுமதியாளர்களை இனங்காண்பதற்கு அறிவூட்டுவதற்காக முறையான திட்டமொன்று தயாரித்தல் காலத்தின் தேவையாக இருந்தமை அவதானிக்கப்பட்டது.

(உ) நிறுவன இயலளவை அதிகரிப்பதற்காக 07 தலைப்புகளின் மீளாய்வாண்டின் பாதீட்டின் மூலம் கீழ் ரூபா 6,850,000 தொகையான நிதிஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் ரூபா 5,850,000 தொகை ஒதுக்கப்பட்ட செயற்பாடுகள் ஆண்டின் போது நிறைவேற்றப்படாதிருந்ததுடன் ஒரு நிகழ்ச்சித்திட்டம் மாத்திரம் (Common Wealth Capacity Building Programme) நிறைவேற்றப்பட்டிருந்தது.

## 4.2 முகாமைத்துவ செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) காப்புறுதி உரித்து தொடர்பாக தவணைப்பணம் அறவிடும் போது, ஏற்றுமதியாளர்கள் 07 நாட்களுக்குள் காப்புறுதித் தவணைப்பணம் செலுத்துவார்களாயின் 5 சதவீத கழிவொன்று உரித்தாகின்ற போதிலும், அவ்வாறு குறிப்பிட்ட பிரகாரம் தவணைப்பணம் செலுத்தாத இரண்டு ஏற்றுமதியாளர்களுக்கும் கழிவாக ரூபா 345,756 தொகை வழங்கப்பட்டிருந்தது.

(ஆ) ஏற்றுமதியாளர் ஒருவருக்கு 2015 ஆகஸ்ட் 14 ஆந் திகதி ரூபா 2,878,127 தொகை நட்டஈட்டுப் பணமாகச் செலுத்தப்பட்டிருக்கும் போது அந்த ஏற்றுமதியாளரினால் அதன் பின்னர் மேற்கொள்ளப்பட்ட ஏற்றுமதிகள் தொடர்பாகவும் “நட்டஈடு பெறாமைக்கான மிகையூதியப் படி” (No Claim Bouns) ஆக ரூபா 93,227 தொகை கழிக்கப்பட்டு தவணைப்பணம் அறவிடப்பட்டிருந்தது.

(இ) கடன் அடிப்படையில் பொருட்கள் ஏற்றுமதி செய்கின்ற ஏற்றுமதியாளர்களின் ஆபத்தினை காப்புறுதி செய்யும் போது வெளிநாட்டு கொள்வனவாளர் தொடர்பான நிலைமை அறிக்கை பெறப்பட்டு அவற்றை மதிப்பீட்டிற்கு உள்ளாக்குதல் நிறுவனத்தின் நடைமுறையாக இருந்த போதிலும், மதிப்பீட்டின் போது ஏற்பட்ட குறைபாடுகளின் காரணமாக 2014 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 2015 ஆம் ஆண்டின் நட்டஈடு செலுத்தும் செலவினம் 87 சதவீதத்தால் குறைவடைந்திருந்தது.

பின்வரும் சந்தர்ப்பங்களின் போது மதிப்பீட்டு வழுவின் காரணமாக மேலதிகமாகச் செலுத்த வேண்டி ஏற்பட்டிருந்தமை தெரிவுப் பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்டது.

I. 2014 அம் ஆண்டின் போது வியாபார நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டு ரூபா 4,000,000 தொகையான அங்கீகரிக்கப்பட்ட மூலதனமொன்று காணப்பட்ட வெளிநாட்டு கொள்வனவாளர் ஒருவருக்காக இரண்டு ஏற்றுமதியாளர்களுக்கு ரூபா 13,000,000 பிணையொன்று வழங்கப்பட்டிருந்தது. அந்த ஏற்றுமதியாளரால் 2014 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட ஏற்றுமதிக்காக, கொள்வனவாளர் பணம் செலுத்தாமையின் காரணமாக 2015 ஆம் ஆண்டின் போது

கூட்டுத்தாபனத்தால் ரூபா 5,040,920 தொகையான நட்டஈட்டைச் செலுத்த வேண்டி ஏற்பட்டிருந்தது.

II. வெளிநாட்டு கொள்வனவாளரின் நிதி பலம், திரவத்தன்மை, நிலையான சொத்துக்கள் மற்றும் பெறுமானத் தேய்வு விகிதாசாரம் பாதகமான நிலையில் காணப்பட்ட போதும் அது தொடர்பாக மதிப்பீட்டிற்கு உள்ளாக்கப்படாமையின் காரணமாக 2015 ஆம் ஆண்டின் போது ரூபா 867,462 தொகையான நட்டஈட்டினை செலுத்தவேண்டி ஏற்பட்டிருந்தது.

III. வெளிநாட்டு கொள்வனவாளர் தொடர்பான தர அறிக்கையில் பாதகமான நிதி நிலைமை காணப்பட்ட போதும், அதனைக் கவனத்திற் கொள்ளாது கடன் எல்லை தீர்மானிக்கப்பட்டிருந்தமையின் காரணமாக, ரூபா 1,267,563 தொகையான நட்டஈட்டைச் செலுத்த வேண்டியேற்பட்டிருந்தது.

IV. வெளிநாட்டு கொள்வனவாளர் தொடர்பான தர அறிக்கையில் நீண்டகாலக் கடன் மூன்று வருடங்களான மிகவும் குறுகிய காலத்தில் 147 சதவீதத்தால் அதிகரித்திருந்தமை தொடர்பில் கூட்டுத்தாபனம் கவனம் செலுத்தாதிருந்ததுடன் பின்னர் கொள்வனவாளர் முறிவடைந்தமையால் ஏற்றுமதியாளருக்கு ரூபா 10,079,299 நட்டஈட்டைச் செலுத்தவேண்டி ஏற்பட்டிருந்தது.

(ஈ) கூட்டுத்தாபனத்தின் காப்புறுதி தவணை வருமானம் பொருட்களின் விலைப்பட்டியல்களின் பெறுமதியின் அடிப்படையில் அங்கீகரிக்கப்பட்ட அட்டவணையின் அடிப்படையில் கணிப்பீடு செய்யப்படுகின்றது. அந்த அட்டவணையின் பிரகாரம் கொடுப்பனவுக் கால எல்லை 01 நாள் முதல் 180 நாட்கள் வரை மேற்கொள்ளக்கூடியதாக தவணைப்பண வீதத்தில் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், ஒரு ஏற்றுமதியாளரிடமிருந்து ஆறு வெளிநாட்டு கொள்வனவாளர்களுக்கு 360 நாட்கள் வரையிலான கடன் கால எல்லையொன்று வழங்கப்பட்டிருந்தது.

**4.3 இனங்காணப்பட்ட நட்டம்**

---------------------------------

தாபன விதிக்கோவையின் XII ஆம் அத்தியாயத்தின் 9 ஆவது பிரிவின் பிரகாரம் விஷேட சுகையீனத்திற்காக ஏற்றுக்கொள்ளத்தக்க வைத்திய சான்றிதழொன்று சமர்ப்பிக்கப்பட்டிருக்கும் போது அது ஏற்றுக்கொள்ளாமையின் காரணமாக கூட்டுத்தாபனத்தின் உத்தியோகத்தரொருவருக்கு ரூபா 507,603 தொகையான இழப்பீட்டுத் தொகையினைச் செலுத்துவதற்கு தொழில் நியாய சபையினால் கட்டளையிடப்பட்டிருந்தது.

**4.4 பதவியணியினர் நிர்வாகம்**

--------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரில் உள்ளடங்காத உதவி முகாமையாளர் பதவிக்காக முறையான அங்கீகாரமின்றி 11 உத்தியோகத்தர்கள் ஆட்சேர்க்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் போது ரூபா 6,346,451 தொகை சம்பளம் மற்றும் படிகளாகச் செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 9.3 ஆம் பிரிவின் பிரகாரம் ஆட்சேர்ப்பு நடைமுறைகள் மற்றும் பதவியுயர்வு நடைமுறைகள் தயாரிக்கப்படாமையினால் 15-25 வருடங்களுக்கிடையே சேவை அனுபவத்துடன் உள்ள உத்தியோகத்தர்களை வெற்றிடப் பதவிகளுக்காக பதவியுயர்வு வழங்கும் திட்டமொன்று காணப்படவில்லை.

(இ) பிரதி பொது முகாமையாளர் (ஆளணி மற்றும் நிர்வாக) பதவி 2012 மார்ச் 18 ஆந் திகதி முதல் வெற்றிடமாகக் காணப்பட்டமையால் நிறுவனத்தின் பதவியணியினர் முகாமைத்துவத்தை உச்ச அளவில் பயன்படுத்துவதற்கு இடையூறாக இருந்தது.

(ஈ) 2009 முதல் வெற்றிடமாகக் காணப்பட்ட 3 பதவிகளுக்காக நிரந்தர ஆட்சேர்ப்புக்களை மேற்கொள்ளாது பதில் கடமை அடிப்படையில் நியமனம் வழங்கப்பட்டு 2015 சனவரி முதல் ஒக்தோபர் வரை ரூபா 378,817 பதிற்கடமைப் படியாகச் செலுத்தப்பட்டிருந்தது.

(உ) 2006 செப்தெம்பர் 22 ஆந் திகதிய 30 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் பிரகாரம் நிறுவன ரீதியான மீள் கட்டமைப்பு, முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரமின்றி 2014 மே 01 ஆந் திகதி முதல் ஊழியர்களின் சம்பளம் திருத்தம் செய்யப்பட்டிருந்தது.

(ஊ) 06/2006 ஆம் இலக்க அரச நிர்வாகச் சுற்றறிக்கை மற்றும் 2009 யூன் 01 ஆந் திகதிய முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் 30(1) ஆம் இலக்கத்தில் காண்பிக்கப்பட்டுள்ள ஆகக் குறைந்த சம்பள படிநிலையை கவனத்தில் கொள்ளாது நிறுவனத்தின் முகாமைத்துவ உதவியாளர் பதவி மற்றும் சமதரத்திலுள்ள பதவிகளுக்காக சம்பள அளவுத் திட்டம் தீர்மானிக்கப்பட்டு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 கூட்டிணைந்த திட்டம்

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றறிக்கையின் 5.1.3 ஆம் பிரிவின் பிரகாரம் பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட நாளது வரையாக்கப்பட்ட கூட்டிணைந்த திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 5.2 செயல்நடவடிக்கைத் திட்டம்

2015 ஆம் ஆண்டில் கூட்டுத்தாபனத்தின் காப்புறுதி உரித்து மற்றும் பிணை விநியோகங்களுக்குரியதாக செயல்நடவடிக்கைத் திட்டத்தில் எதிர்பார்க்கப்பட்ட எண்ணிக்கை மற்றும் உள்ளபடியான எண்ணிக்கைகளை முன்னைய ஆண்டின் அளவுகளுடன் ஒப்பீடு செய்த போது சகல காப்புறுதி உரித்துக்களையும் விநியோகித்தல் 2014 ஆம் ஆண்டின் போது 12 சதவீதம் முதல் 46 சதவீதம் வரையான வீச்சில் குறைவடைந்திருந்ததுடன் அது நடப்பாண்டின் போது 41 சதவீதம் முதல் 68 சதவீதம் வரையிலான வீச்சில் குறைவடைந்திருந்தது.

### 5.3 உள்ளகக் கணக்காய்வு

உள்ளகக் கணக்காய்வாளர் பதவியொன்று 2015 திசெம்பர் 31 ஆந் திகதி வரையும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தால் அங்கீகரிக்கப்படாதிருந்ததுடன் 2012 பெப்ரவரி 10 ஆந் திகதி முதல் கூட்டுத்தாபனத்தின் உள்ளகக் கணக்காய்வு நடவடிக்கைகளுக்கு தனியார் கணக்காய்வுக் கம்பனியொன்று நியமிக்கப்பட்டிருந்தது.

### 5.4 கொள்வனவுத் திட்டம்

மீளாய்வாண்டில் நிலையான சொத்துக்களைக் கொள்வனவு செய்வதற்காக ரூபா 42,800,000 நிதி ஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்த போதிலும், அதற்காக கொள்வனவுத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 5.5 பாதீட்டுக் கட்டுப்பாடு

பாதிடப்பட்ட மற்றும் உள்ளபடியான வருமான செலவினங்களுக்கிடையே 16 சதவீதம் முதல் 100 சதவீதம் வரையிலான முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்தப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலான குறைபாடுகள் அவ்வப்போது கூட்டுத்தாபனத்தின் தலைவரது கவனத்திற்கு கொண்டுவரப்பட்டன. கீழே குறிப்பிடப்பட்ட கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| | முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் | அவதானிப்புக்கள் |
|---|---|---|
| (அ) | வெளிநாட்டு கொள்வனவாளர்களின் மதிப்பீட்டு நடைமுறைகள் | தர அறிக்கை மதிப்பீட்டின் போது போதியளவான கவனம் செலுத்தப்படாமை |
| (ஆ) | ஊழியர் முகாமைத்துவம் | ஊழியர்கள் ஆட்சேர்த்தல் மற்றும் பதவியுயர்வு நடவடிக்கைகள் முறையாக இன்மை |
| (இ) | செயற்பாட்டு கட்டுப்பாடு | செயல்நடவடிக்கைத் திட்டத்தின் இலக்கினை அடையாமை. |